செய்தி வெளியீடு எண்.73 நாள்.07.07.2021

**திருவான்மியூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 28.07.2021 வரை**

**இணையவழி விண்ணப்பித்தல்**

சென்னை மாவட்ட ஆட்சியர் மாணவர் சேர்க்கை குறித்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

2021 ஆம் ஆண்டிற்கான அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் திருவான்மியூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் கிண்டி (மகளிர்) வளாகம் Electronics Mechanic, Electrician, Computer Operator and Programming Assistant, Technician Medical Electronics ஆகிய தொழிற்பிரிவுகளுக்கு, 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு வாய்ப்பு தரும் விதமாக இணையவழி மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது. **இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர விரும்பும் தகுதியுள்ள மாணவ/மாணவியர்களுக்கு 28.07.2021-ஆம் தேதிக்குள், www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.** அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தகுதி பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு கட்டணமில்லா பயிற்சி மற்றும் அரசால் வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை ரூ750/-, மடிக்கணினி, மிதிவண்டி, பேருந்து பயணச்சலுகை, பாடபுத்தகம், சீருடை மற்றும் வரைபட கருவிகள் என பல சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடிவில் மத்திய மற்றும் மாநில அரசின் சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்பும் வழங்கப்படும். மேலும் விவரங்கள் அறிய இத்தொழிற்பயிற்சி நிலைய தொலைபேசி எண். 044-29540657-ஐ அணுகலாம்.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை–01**